மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லை என்றுதான் படித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது அந்த மருத்துவமனை ஏற்கெனவே 20 படுக்கைகள் கொண்டதாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அங்கே வெளிப்புற நோயாளிகள் 400 பேர்தான் வருகிறார்கள். உள்ளே தங்கி இருப்பவர்கள் 37 பேர் தான் இருக்கிறார்கள். எனவே நோயாளிகள் அதிகமாக ஆனால் தான் மருத்துவமனை பெரிதாக ஆக்கப்படும். நோயாளிகளைப் பொறுத்துத்தான் அது இருக்கிறது. அதற்காக நோய் வர வேண்டுமென்று நான் விரும்பவில்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனை தாலுகா மருத்துவ மனையாக இருப்பதால் அங்கே எக்ஸ்-ரே பிரிவு, ஆப்பரேஷன் தியேட்டர், E.C.G. பிரிவு போன்றவற்றை அமைக்கவும் ஆம்புலன்ஸ் வேன் புதிதாக வாங்கிக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து தாலுகா மருத்துவமனைகளிலும் எக்ஸ்-ரே பிரிவு வைக்கலாம் என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அப்போது நிச்சயம் இதைப்பற்றி அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுதல்.

125—(* வினா எண் 11911) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS